வு எண் — M.5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை–4 குருகுலம், மாம்பாக்கம்; கர, பங்குனி; 21—3—52. தளிர்–25


குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## வித்தும் விளைவும்

உடற் பயிற்சி செய்து மனிதர் எவ்வளவுதான் முயன்றாலும் யானை முதலிய விலங்குகளின் வலிமையையோ, புளி, ஆல், அரசு முதலிய மரங்களின் வலிமையையோ அடைய முடியாது, மனிதர்க்கு வலிமை அறிவு; ஆகவே அவர்கள் தமது அறிவு வலிமையால், மற்ற விலங்கு முதலியவைகளையும் அடக்கி ஆளும் ஆற்றல் பெற்றிருக்கிறார்கள். இவ்வுண்மையைத் தெரிந்தே, மனிதர்க்கு வலிமை, உடலோ பொருளோ பிறவோ அல்ல; அறிவே என்னும் பொருள் புலப்படும்படி, அறிவை 'ஊரன்' என்று பெரியோர் வழங்கி வருகின்றனர். ஊரன் என்பது வலிமை.

அருளில் பொருந்தும்போது அறிவு மெய்யறிவெனப்படும்; மனம் முதலிய பொருளில் பொருந்தும்போது பொய்யறிவெனப் படும். அறிவு எப்போதும் தனித்துத் தன்னறிவாயிராது. ஆதலால், அறிவை மெய்யறிவு பொய்யறிவு என இரு வகையாகவே உலகம் கூறும்.

இவற்றில் பொய்யறிவு ஐயந் திரிபுகளுடையதாய் ஆற்றல் தளர்ந்தது; மெய்யறிவு, தீது நீக்கி நன்மையை ஆளும் தன்னறிவு நிகழ்ச்சிக்கும் வலிமை தந்து, நன்மை தீமை அற்ற பேரமைதி பேரினிமை ஆகிய பேராற்றல் நிலைகளுக்கும் வன்மை அளிப்பதாகும். ஆதலால், அம் மெய்யறிவே உண்மையில் 'ஊரன்' என்னும் வலிமைப் பெயர்க்கு உரியது.

அவ்வாறால், பருமை மதங் கொண்ட புலன்களை அடக்கி இறை பணிகளில் அவற்றைச் செலுத்தவல்லவன், தன்பால் ஞானம் என்னும் சேம நிதியாகிய செல்வம் விளையும் விதைபோல் ஒரு பயனுள்ள மனிதனாக விளங்குகின்றான். மற்றவர்கள் மனிதராக இருந்துதான் என்ன பயன்? அவர்கள், பிறவிக்கே வித்தாகின்றனர்.

**உரனென்னுந் தோட்டியான்**
**ஓரைந்தும் காப்பான்**
**வரனென்னும் வைப்புக்கோர்**
**வித்து.**

உரன் என்னும் தோட்டியான்—அறிவு என்னும் அங்குசத்தால், ஓர் ஐந்தும்—புலன்களாகிய ஓர் ஐந்து யானைகளையும், காப்பான் – நெறி விலகாமல் காத்துக்கொள்பவன், வரன் என்னும் வைப்புக்கு ஓர் வித்து—ஞானம் என்னும் செல்வத்துக்கு ஒரு விதை போல்வான்.

புலனடக்கம் உடையவன் ஞானச் செல்வம் விளைதற்கு ஒரு நல்ல விதை போல்வான் என்பது கருத்து; ஆதலின், 'வரன் என்னும் வைப்பிற்கு ஓர் வித்து' என்றார் வைப்பு – செல்வம்.

'தீது ஒரீஇ நன்றின்பால் உய்ப்பது அறிவு' ஆதலின், 'உரன்' அறிவை உணர்த்திற்று.

'தோட்டி' என்ற குறிப்பால், ஐந்து என்பது ஐந்து யானைகளை உணர்த்தும், அவை மதர்த்தவை யாதலின். ஐந்து புலன்களையும் ஒரு மனம் இயக்குதலின், 'ஓர் ஐந்தும்' என்றார்.

வரன், இங்கே ஞானம்; மேன்மையானது என்றபடி. ஞானச் செல்வம் என்பதும் அருட்செல்வம் என்பதும் ஒன்றே.

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.


| இலை | கர, பங்குனி | தளிர் |
|---|---|---|
| 4 | 21-3-52 வெள்ளி | 25 |


# தொழில் முயற்சி

நல்வாழ்வுக்கு உழவு, தொழில், வாணிபம் என்னும் மூன்று தொழில் நிலைகளும் சிறப்பாக இருக்க வேண்டும். அதோடு முறையே அவைதம் இன்றியமையாமைக்கு ஏற்ப முதன்மையும் சிறப்பும் பெற்று நடைபெற வேண்டும். அவ்வாறின்றி எந்த நாட்டிலேனும் வாணிபத்துக்கு முதன்மையும், தொழில்களுக்கு அடுத்த மதிப்பும், உழவுக்குப் பின்னும் குறைந்த மதிப்பும் ஆக முறை பிறழ்ந்த மதிப்பு நிலை இருக்குமாயின் அந்நாடு சுரண்டலுக்குட்பட்டாவது, செல்வங் குறைந்தாவது, வளமிழந்தாவது, மாற்றார் சூழ்ச்சிகட்கு இலக்காகியாவது அழிய நேரும்.

திருவள்ளுவர் உழு தொழிலை மட்டும் சிறப்பித்து மற்றத் தொழில்கள் பற்றியும், வாணிபம் பற்றியும் எதும் குறிப்பிடாது விட்டுவிட்டது என் என்று நன்றாகச் சிந்தித்துப் பார்த்தால் சில பொருளாதார நுட்பங்கள் விளங்கும் என்று புலப்படுகிறது.

ஒரு நாட்டை இன்னொரு நாடு அடிமைப்படுத்தாமலே கூடச் சுரண்டுவதற்கும் பிற் போக்கில் இருத்துவதற்கும் இக்கால வாணிபத்தைப்போல் துணை செய்யக் கூடியது வேறு எதுவுமில்லை என்று சொல்லலாம். ஆதலின் வாணிப நிலைகளில் ஒரு நாடு பிற நாட்டோடு கொள்ளும் தொடர்புகளில் மிக விழிப்பாக இருத்தல் வேண்டும். கூடிய மட்டும் அவ்வந் நாட்டு வாழ்க்கைத் தேவைகளை அங்கங்கேயே படைத்துக் கொள்ளவும், வீண் ஏற்றுமதி இறக்குமதிகளைக் குறைத்துக் கொள்ளவும் முயல வேண்டும்.

முடியாட்சிக் காலத்தில் மண்ணாசையினால் நாட்டுக்கு நாடு பகையும் போரும் பெருகின என்றால், இக் குடியாட்சிக் காலத்தில் பகைமைக்கும் போருக்கும் காரணமாக இருப்பது அளவுக்கு மிஞ்சி நுகர் பொருள் தொழில்களும் அவற்றின் வாணிப நிலைகளும் வளர்ந்திருப்பதே என்று கூடச் சுருக்கமாகச் சொல்லி விடலாம்.

பொதுவான இச் சில கருத்துக்களை மேலும் நுணுகிப் பார்ப்பின் விரியும்; ஆதலின், இனி இக் கருத்துகளின் மேல் நம் நாட்டு நிலை என்ன என்றும் அதை ஒட்டியுள்ள நம்மவர் முயற்சிகள் எப்படியிருக்கின்றன என்றும் சிறிது கருதுவோம்.

ஆறுகள் மலிந்ததும், உழு தொழிலையே முதன் முதலிற் கண்டதுமாகிய நம் நாட்டில் இன்று அத் தொழில் வளமாக நடை பெறவில்லை. "சீரைத் தேடின் ஏரைத் தேடு" "உழுவார் உலகத்தார்க்கு ஆணி" "சுழன்றும் ஏர்ப்பின்னது உலகு" "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்றெல்லாம் சிறப்பிக்கப் பெற்ற உழவுக்கும், உழவர்க்கும் இன்று மதிப்பு இல்லை. ஓர் உழவர் தம்மைத் தாமே இழிந்தவராக எண்ணிக் கொண்டு பெருமிதம் இன்றி இருக்கின்றனர்; தமது கொள்வினை கொடைவினைகளைத் தம் போன்ற உழவரோடு செய்து கொள்ள விழையாமல் பல்வேறு தொழில் நிலைகளில் உள்ள பிறர் உறவையே நாடி அலைகின்றார். அதுவே தமது மதிப்பு என்று எண்ணுகின்றார். இந் நிலையினால் உழு தொழில் பெருமிதமாகவும், ஊக்கமாகவும் நடத்தப் பெறாமல் உழவர்கள் தொகையும் நாளுக்கு நாள் குறைந்துகொண்டு வருகிறது. வேறு வழியற்றோர் தவிர மற்றவர்கள் எல்லாம் கூலி வேலையும், அரசியல் வாணிப அலுவல்களும் தேடிக் கொள்ளுகின்றனர். அதோடு மக்கள் எண்ணிக்கை வளர்வதற்கு ஏற்ப உணவைப் பெருக்கும் முறையில் உழு தொழிலில் இந் நாட்டில் புது முறைகள் கையாளப்படுதல் இல்லை. விளைப்பவர்களும் நெல் முதலிய உணவுப் பண்டங்களை விளைக்க முற்படாமல் புகையிலை, கரும்பு, தேயிலை, வேர்க்கடலை முதலியவற்றையே வாணிப முறையில் வருவாய் கூடுதலாக வருவது கண்டு விளைக்க முற்படுகின்றனர். இக் காரணங்களால் நாளுக்கு நாள் உணவுப் பற்றாக்குறை நாளும் பெருகிக் கொண்டே இருக்கிறது. இந் நிலை மாற அரசாங்கம் நீர் வளத்துக்கும், நில வளத்துக்கும், பிற செய் முறைகளுக்கும் மட்டும் உதவியும் வழியும் காட்டினால் போதாது, உழவர்களுக்கு மற்றக் குடிமக்கட்கு இருப்பதைவிட மிகுந்த மதிப்பு உண்டாகுமாறு செய்ய வேண்டும். அவர்களுக்கு இலவசக் கட்டாயக்கல்வி வசதியும்., அரசியலில் "வெண்ணெயூர்ச் சடையன் தங்கள் மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி" என்று கம்பர் குறிப்பிடுவது போல முதல் உரிமையும் இருக்குமாறு செய்தல் வேண்டும்.

# - குருகுல முறைகளின் நினைவு -

'பாகிரதி'

நான் ஒரு நாள் என் தோழியைக் காண மாம்பாக்கத்தில் விளங்கும் குருகுலத்திற்குச் சென்றிருந்தேன். என் தோழி அங்கு இருந்ததனால், குருகுலத்தைப் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அவர் எனக்கு நல்ல விருந்தளித்தார். அவர் என்னை அங்கு ஒரு நாள் தங்கும்படியும் வற்புறுத்தினார். அவர் சொல்லைத் தட்டாமல் அங்கு ஒரு நாள் தங்கியிருந்தேன். அவர் அங்கு நடக்கும் தொழில்களைப் பற்றியும், குருகுலத்தின் நோக்கத்தைப் பற்றியும் எனக்கு மிகவும் விரிவாக எடுத்துக் கூறினார். நான் இதைக் கேட்டு மிகவும் வியப்படைந்தேன்!

அந்தக் குருகுலத்தின் நிர்வாகியிடம் குருகுல அமைப்பு நன்றாக இருக்கின்றதென்று சொன்னேன். பிறகு, நான் கண்ட 'காந்தீயத்தைப்' பின்பற்றிய பள்ளியைப்பற்றி அவரிடம் கூறினேன். அதற்கு, அதைப்பற்றி எழுதவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இதுவரை நான் எதைப் பற்றியும் எழுதினது கிடையாது. ஏதோ எனக்குத் தெரிந்தவற்றில் அப்பள்ளியைப்பற்றிச் சிறிது எழுதுகிறேன்.

தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள 'வேதாரணியம்' என்ற ஊரிலிருந்து ஒரு மைல் தூரத்திலுள்ள மஹாராஜபுரம் என்ற இடத்தில் ஆகாரக் கல்வித் திட்டப்படி அன்னை கஸ்தூரியின் பெயரால் ஒரு பள்ளி இருக்கிறது. அதன் பெயர் 'கஸ்தூரி பாய் காந்தி கன்யா குருகுலம்' என்று வழங்கப்படுகிறது.

அங்குச் சுமார் இருநூறு பிள்ளைகள் படிக்கின்றனர். அதன் நிர்வாகி, சர்தார் வேதரத்தினம் பிள்ளையின் புதல்வர் திரு. குட்டியப்பா என்பவர்.

அங்கு அதிக எண்ணிக்கை ஹரிஜன பிள்ளைகளே இருக்கின்றனர். அங்கு ஆசிரிய ஆசிரியைகளும் தங்கியிருக்கின்றனர். அவர்களும் விடுதியிலேயே இருக்கவேண்டும். அவர்கள் வெளியிலிருந்து கொண்டு படிப்புச் சொல்லித் தரக்கூடாது.

இப் பள்ளியின் நடுவில் ஒரு தாமரைக் குளம் உள்ளது. அதைச்சுற்றி உணவு விடுதிகளும், ஆசிரியர்க்கென்று தனித்தனி விடுதிகளும், விருந்தினர் விடுதியும், வகுப்பு விடுதியும் இருக்கின்றன. இவைகளெல்லாம் தென்னங் கீற்றுகளாலேயே கட்டப்பட்டிருக்கின்றன. அங்கு ஆசிரியர்க்கென்று உயர்ந்த ஆசனங்கள் கிடையா. மாணவ மாணவிகளும் ஆசிரியர்களும் சரிசமமாகவே இருக்கின்றனர். ஆசிரியர்கள் கண்டிப்பாகக் கதராடைதான் அணியவேண்டும். மாணவ மாணவிகள் எந்த உணவு உண்கிறார்களோ அந்த உணவையேதான் ஆசிரியரும் உட்கொள்ளவேண்டும்.

அங்குப் பிள்ளைகளுக்குப் பல வகை வேலைகள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. அங்குள்ள பிள்ளைகள் எல்லோரும் விதையுடன் கூடிய பஞ்சை அரைத்து, அடித்து, பஞ்சைப் பட்டை போடுகிறார்கள். பிறகு தக்களியிலும் ராட்டிலும் நூல் நூற்கவும், நெசவு செய்யவும் அங்குக் கற்பிக்கப்படுகிறது. அங்குள்ள பிள்ளைகளுக்குக் கணக்கு, பூகோளம், பஞ்சு கிடைக்குமிடங்கள் முதலியன இதன் மூலமாகவே கற்றுக் கொடுக்கப்படுகிறது. தோட்டப் பயிர்கள் தோட்டவேலை முதலியன உண்டு.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள்
கிசான் டிரேட்மார்க்


பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்கு தெரு சென்னை 1.

# சிலப்பதிகாரம்

## 22. கண்ணகியின் துயரம்

'முத்துசாமி'

குரவைக் கூத்து முடிந்ததும் மாதரி நீராடச் சென்றாள். அவ்வமயம் ஒரு பெண் கோவலன் கொலையுண்ட செய்தியை ஊரார் வாயிலாக அறிந்து சொல்ல வந்தாள். கண்ணகியின் எதிரே வந்ததும் அத் துக்ககரமான செய்தியைத் தன் வாயால் சொல்லக் கூசிப் பேசாமல் நின்றாள். கண்ணகி அவள் முகக் குறிப்பிலிருந்து ஏதோ சொல்ல வந்து சொல்வதற்கு அஞ்சி நிற்பதாக அறிந்து "என் கணவனைக் காணாது என் நெஞ்சம் வருந்துகின்றது; அவரைப் பற்றி ஊரார் ஏதாவது தெரிவித்தனராயின் விரைவில் தெரிவி" என்று மிக்க ஆவலோடு கேட்க அப்பெண் "நின் கணவனை அரண்மனைச் சிலம்பைத் திருடினானென்று கருதிக் கொலை செய்து விட்டனர்" என்று தெரிவித்தனள்.

அத் தீச் செய்தியைக் கேட்டவுடனே,

"பொங்கி யெழுந்தாள்;
விழுந்தாள்; பொழிகதிர்த்
திங்கள் முகிலோடும்
சேண்நிலம் கொண்டெனச்
செங்கண் சிவப்ப அழுதாள்....."

சீற்றம் பொங்கி யெழுந்தாள்; நிலவினைப் பொழியும் தீங்கதிர்த் திங்கள் முகிலோடும் நிலத்தில் விழுந்தது போல விழுந்தாள்; கண் சிவக்க அழுதாள்.

விரித்த கூந்தல் முகில் போலவும், முகம் திங்கள் போலவும் இருந்தமையின் அவள் நிலத்தில் விழுந்தது திங்கள் முகிலோடும் விழுந்தது போல என்றார்.

துக்கத்தால் உணர்ச்சி மேலிடும் போது அவலச் சுவைப் பாடல் எழுவது இயல்பு. கற்றறிந்தவராயின் நல்ல இலக்கிய நயத்தோடும் இலக்கண அமைதியோடும் பாக்கள் புனைவர். அவைகளை "இரங்கற் பா" என்பர். காந்தியடிகள் மறைந்த போதும், மறைமலையடிகள், ஞானியாரடிகள் இவர்கள் மறைந்த போதும் பலர் இரங்கற் பாக்கள் பாடினர். கற்றறியாத 'சாதாரண' மக்களாயின் தங்களியல்பில் பாடிப் புலம்புவர். அவற்றை "ஒப்பாரி" என்பர். ஒரோ ஒரு கால் அவை சொல் நயமும் பொருள். நயமும் சேர்ந்து விளங்குவதுண்டு. பெண்கள் அவலச் சுவை பாடுதலில் வல்லார் என்பது தோன்ற ஒரு கதை தென்னாட்டில் வழங்கி வருகின்றது.

கணவனை யிழந்த பெண்ணொருத்தி அழுது புலம்பிக் கொண்டிருந்தாள். அப்போது வீதி வழியே ஒரு புலவர் போய்க்கொண்டிருந்தார். அவர் அப் பெண்ணின் அழுகுரல் கேட்டு நின்று கவனித்தார். அப்பொழுது அவள் பாடிய அடி "ஜில்லென்று பூத்த சிறு நெருஞ்சிக் காட்டுடே" என்பது. அடுத்த அடியை முடிப்பதற்குள் அருகிருப்பவள் அவள் வாயை மூடித் தேறுதல் மொழி பகர அப் பெண் அதோடு நிறுத்தி விட்டாள். அப் புலவர் எஞ்சிய அடியை முடிக்கப் பார்த்தார்; இயலவில்லை. மறுநாள் அவ் வழியே எஞ்சிய அடியையும் அறியும் நோக்கத்தோடு வந்து காத்திருந்தார். அவள் பின் வருமாறு முடித்தாள்.

"ஜில்லென்று பூத்த சிறு
நெருஞ்சிக் காட்டுடே
நில்லென்று சொல்லி
நெடுவழி போனாயே"

என்று முடித்தாள். புலவர் அவ்வடிகளில் உள்ள சொல்லழகு பொருளழகு இவைகளை எண்ணி வியந்தார். இவ்வாறு மாதர்கள் அவலச் சுவைப் பாடலிசைப்பதில் வல்லார் என்பது தோன்ற ஒரு கதை தென்னாட்டில் வழங்கி வருகிறது.

கணவனைப் பிரிந்த துக்கம் மேலிட உணர்ச்சி வயப்பட்டுக் கண்ணகி பலவாறு புலம்பினள். அவை கன்னெஞ்சையும் கரைக்குந் தன்மைய.

"இன்புறு தங்கணவர்
இடரெரி யகமூழ்கத்
துன்புறு வனநோற்றுத்
துயருறு மகளிரைப்போல்
மன்பதை யலர்தூற்ற
மன்னவன் தவறிழைப்ப
அன்பனை யிழந்தேன்யான்
அவலங்கொண் டழிவலோ"

என்று அழுது புலம்பினள். மன்னவன் தவறால் தன் கணவன் இறந்தான் என்பது தோன்ற "மன்னவன் தவறி

Telegrams: "RAMBROS"
N. Ramu Bros;
GENERAL HARDWARE
MERCHANTS
AVANASHI ROAD,
COIMBATORE.

ழைப்ப" என்று சொல்லிச் சொல்லி யழுதாள். மன்னவன் மேல் கடுஞ்சீற்றங் கொண்டாள்.

தாங்கொணுச் சீற்றம் பொங்கியெழ "குரவைக் கூத்தாட வந்திரண்ட பெண்களே! கேளுங்கள். காய்கதிர்ச் செல்வனே! இப்பரந்த உலகத்திலுள்ள பொருள்கள் யாவற்றையும் நீயறிவாய். கள்வனோ என் கணவன்?" என்று அப்பெண்கள் முன்னிலையில் கதிரவனைப் பார்த்துக் கேட்டாள்.

அப்பொழுது விண்ணிடையோர் ஒலி "கள்வனோ அல்லன் கருங்கயற் கண் மாதாராய் ஒள்ளெரி யுண்ணும் இவ்வூர்" என்று எழுந்தது. அவ்வாறெலியை யாவரும் கேட்டனர்.

தன்பாலிருந்த மற்றொரு சிலம்பைக் கையிலேந்திக் கொண்டு மதுரை வீதி வழியே புலம்பிக் கொண்டே சென்றாள். மதுரை மாநகரில் வாழும் பெண்டிரைப் பார்த்து "முறையில் அரசன்றன் ஊரிலிருந்து வாழும் நிறையுடைப் பத்தினிப் பெண்டிர்கள்" என்று விளித்து, "கள்வனோ அல்லன் கணவன் என் காற் சிலம்பு கொள்ளும் விலைப்பொருட்டாற் கொன்றனரே" என்று பலவாறு கூறிப் புலம்பினள். பின்னர் "என் கணவனை முன்போலக் கண்டு அவன் கூறும் நல்லுரையைக் கேட்பேன்; அங்ஙனங் கேளேனாயின் என்னை இகழுமின்" என்று சூள் கூறிச் சென்றாள்.

வெட்டுண்டு கிடந்த கோவலனைச் சிலர் காட்டக் கண்டு பலவாறு புலம்பினள். அன்று காலையில் கோவலன் பிரியுமுன் தன் குஞ்சியில் (தலைமயிரில்) சூடிய மாலையைக் கொடுக்க, கண்ணகி அதனை வாங்கித் தன் கூந்தலில் சூடிக் கொண்டாள். காலையில் அங்ஙனம் அன்பாயிருந்தவனை மாலையில் குருதி சோர மண் மீது மாண்டு கிடக்கக் கண்டாள். அந்தோ! அவளுற்ற துயரத்தை எங்ஙனம் எடுத்தெழுதுவேன்.

"என் துயரத்தினைக் கண்டும் நம் காதலியாகிய இவள் எவ்வளவு துயருறுவள் என்று எண்ணுகின்றிலீர். பொன் போன்ற உம் ஆகம் பொடியாடிக் கிடப்பதோ. இத்துயர்க்குரிய கொலைக்குக் காரணம் யாதோ? முன்வினையோ? யாருந் துணையில்லாத என் முன்னே உம் தார் மலி மணிமார்பம் மண்ணுடிக் கிடப்பதோ? இக் கூடல் மாநகரத்தில் பத்தினிப் பெண்டிரும் உண்டு கொல்! ஈன்ற குழவி எடுத்து வளர்க்கும் சான்றோரும் உண்டு கொல்! இங்குத் தெய்வமும் உண்டு கொல்!" என்று இவ்வாறாக அழுது புலம்பித் தன் கணவன் ஆகம் தழுவினள்.

அப்பொழுது கோவலன் உயிர் பெற்றெழுந்து "மதி போன்ற உன் முகம் வாடியதே" என்று கூறி அவள் கண்ணீரைத் தன் கையால் மாற்றினன். கண்ணகி அவன் திருவடியைத் தொழுதாள். அவன் "நீ யிருக்க" என்று கூறி அமரர் குழாத்துடன் துறக்கம் புகுந்தான்.

கோவலன் இப் பிறவியில் நல்லனவே செய்தவனாதலால் அமரர் குழாத்துடன் துறக்கம் புகுந்தான். நல்லனவே செய்தவனாயினும் முன் செய்த தீவினை அவனை விடாது பற்றித் தொடர்ந்து வந்து கொலையுண்டிறக்கச் செய்தது. "பற்றித் தொடரும் இருவினைப் புண்ணிய பாவமுமே" என்ற பட்டினத்தடிகள் வாக்கு உண்மையேயன்றோ? கோவலன் குணநலத்தில் ஐயமுறுவார் அவர் அமரர் குழாத்துடன் துறக்கம் புகுந்தான் என்று வரும் பகுதியை ஓர்க.

பெண்டிர் கற்பின் திறம் மன்னவன் செங்கோலைக் காக்கும். மன்னவன் நீதி தவறினால் பெண்டிர் கற்பின் திறம் குறைபட்டதாக எண்ணப் பெறும்.

கண்ணகி அரசன் தவறிழைத்தான் என்று எண்ணினளாத

நஞ்சன்கூடு பல்பொடி.

பாக்டெரியாரின்




யுனைடெட் கன்ஸர்ன்,

54, பந்தர் தெரு, :: சென்னை-1

வின் “பத்தினிப் பெண்டிரும் உண்டு கொல்!” என்று ஐயமுற்றாளெனினும் உண்மையில் கோவலன் முன்வினைப் பயன் காரணமாக இறக்க நேர்ந்ததேயன்றி அரசன் தவறுலன்றானமையின் மதுரை மாநகரில் வாழும் பெண்டிர் கற்பில் குறையேதுமில்லை யென்க. அற்றாகக் கண்ணகி அப்பெண்டிர் கற்பின் திறத்தில் ஐயுற்றதென்னையெனில் தன் கணவன் முன்னை வினையால் இறந்தான் என்று அறியாள்; பின்னர், மதுராபதி யென்னுந் தெய்வம் அறிவிக்கும்போதுதான் அறிந்துகொள்வாளென்க. ஒரு பிறவியில் செய்த வினையின் நினைவை மறுபிறவியில் தெரியாவண்ணம் கடவுள் மறைத்துவிடுவாரானமையின் முன் பிறவி நிகழ்ச்சிகளை அறிய இயலாது. இதனை இறைவனது ஐந்தொழிலில் ஒன்றாகிய ‘மறைப்பு’ என்பர்.

கோவலனைப் பிரிந்த கண்ணகி “இனி எங்குச் சென்று என் கணவனைத் தேடுவேன். யானும் அவனோடே செல்லத்தான் வேண்டும். அதுவும் எளிதோ? எனினும், என் சினம் தணிந்தாலன்றி அவனோடு கூடேன். கொடிய மன்னனைக் கண்டு அவன் என் கணவனைக் கொன்றதற்குக் காரணம் யாதென்று கேட்பேன்” என்று கூறி அரசவைக்குச் செல்ல எழுந்தாள். முன்னர்த் தான் கண்ட தீக்கனவு மெய்யாயினதை யெண்ணிக் கண்ணீர் வடித்துப், பின்னர் அதனைத் துடைத்துக்கொண்டு சென்று அரண்மனை வாயிலை அடைந்தனள்.

— —

# “நான் பெற்ற * * * இன்பம்......”

‘பா. வரதராசன்’

உயிருக்குச் சாத்வீகமும் நற்சிந்தனையும் உண்மை நாட்டமும் ஊக்குவதற்கு ஏதுவாயுள்ள சமயத்துறையில் மேலை நாட்டவர் இந்நாள்வரை வெற்றி அடைந்தவராக, வரலாற்று மூலம், அறியக்கூட வில்லை. இதனால் அவர்களிடையே ஆத்மீக வாழ்வு அருகியே காணப்படுகின்றது. இதற்குக் காரணம் அவர்கள் சமயத்துறையில் பிழைபட்டதேயாகும்.

நம் தமிழ்த்தாயின் நன்மக்களில் ஒருவரான காலஞ்சென்ற மாயூரம் வேதநாயகம் பிள்ளையவர்கள், தாம் புனைந்த ‘பிரதாப முதலியார் சரித்திரம்’ என்னும் புதினத்தில், இம் மேனாட்டு அறிஞர்களைக் குறிப்பிடுகின்றார்.

லெக்கி எல் (**Lecky. L**), ஸ்டீபன் (**Stephen**), பெயின் (**Bain**), டார்வின் (**Darwin**), கம்டி-எஸ் (**Comte. S**), மில் (**Mill**), ஹெர்பர்ட் (**Herbert**), ஹ்யூம் (**Hume**), காலின்ஸ் (**Collins**), டிண்டால் (**Tyndall**), வால்டேர், (**Voltair**) முதலியோர் வேத விரோதிகளென்றும், அவர்களியற்றிய நூல்கள் நாத்திக நூல்களென்றும் குறிப்பிட்டுள்ளார். அவர் புதினத்தில் கற்பித்த ஒரு பாத்திரன், இம் மக்களியற்றிய நூல்களைப் பயின்றதன் பயனாக, தெய்வமில்லை, வேதமில்லை, பாவ புண்ணியமில்லை, நரக மோட்சமில்லை, உலக சுகமே சுகம் என்கின்ற சித்தாந்தம் கொண்டவனான் என்ற குறிப்பும் கொடுத்துள்ளார். மேலும், “மேற்சொல்லிய சமய விரோதிகள், உலகத்துக்குச் சமயம் அவசியந்தானென்றும் அப்படி இல்லாத வரையில் அக்கிரமம் நடக்குமென்றும் ஒப்புக் கொண்டார்கள். அப்படியே வால்டேர், ஒரு தேவாலயம் கட்டினான். ஹ்யூம் சில சமயங்களில் கோயிலுக்குப் போனான். காலின்ஸ் தன்னுடைய வேலைக்காரர்கள் தன்னைக் கொலை செய்யாமலும் திருடாமலுமிருக்க வேண்டியதற்காக அவர்கள் கோயிலுக்குப் போகும்படி கட்டாயம் செய்தான். ஹக்ஸ்லி, பைபிள் என்னும் சுவிசேஷத்தைப் பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள் படிக்க வேண்டுமென்று முயற்சித்தான். டிண்டால், தன்னை யாராவது சமய விரோதி யென்று சொன்னால் சண்டைக்கு வருவான்” என்றும் குறித்துள்ளார்கள்.

இங்கே ஒரு முரண்பாடு காண்கின்றோம். ஆனால் அதன் உண்மை வேறு. மேற்சொல்லிய ஆசிரியர்கள் வாழ்ந்த காலத்தையும், அவர்கள் சூழலையும் ஆராய்ந்தால் உண்மை நன்கு புலனாகும்.

அந் நாட்களில் மேல் (கிறித்துவ) நாடுகளின் சமயத் தலைமை யாதீனம் உரோமாபுரி ஆலயமாகும். (**Church of Rome**). அதன் தலைவர் கிறித்து சமயக் குருவாவர் (**Pope**). இவ்வாதீனமே, மேனாட்டுக் கிறித்

துவ நாடுகள் யாவற்றிற்கும் சமயத் துறையில் தலைமை பூண்டு வந்தது. நாளடைவில், சமயத் துறையில் பணியாற்றச் சிற்றரசர்களாலும், பேரரசர்களாலும் மனமுவந்து ஒதுக்கப்பட்ட மானியங்கள் பெருகின. செல்வம் கொழித்தது. செல்வாக்குப் பெருகியது. செல்வமும் செல்வாக்கும் பெருகிய சமயக் குருக்கள் (**Pope**) சமயத் துறையின் விதிகளையும் பணியின் பண்பையும் மறந்து அரசியலில் தலையிடத் துவங்கினர். அவர்கள் தலையீடு வரம்பு கடந்தே சென்றது. அரசுகளைப் பணிய வைத்தனர். தங்கள் மதிப்புக்குக் கருத்திருத்தாத மன்னரிடத்தில் போர்க்கோலம் பூண்டனர். அன்னாரைச் சமய சம்பிரதாயங்களினின்றும் ஒதுக்கி வைத்துப் புறக்கணித்தனர். முறை தவறினர். செல்வத்தின் சேர்க்கையால் இயல்பாய் மிகும் கேளிக்கைகளில் உழன்றனர். கடமையையும் பணியையும் மறந்தனர்.

அன்னாரின் இழிந்த போக்கு மக்களையும் மன்னர்களையும் விழித்தெழச் செய்தது. மக்கள் சீற்றம் கொண்டனர். அவர்களிடையே அவநம்பிக்கை எழுந்தது. சமயக் குருக்களின் உரிமைகளில் ஐயம் கொள்ளாத மக்களும், அன்னாரின் ஆடம்பரத்தையும் நெறி பிறழ்ச்சியையும் வெறுத்தனர். நம்பிக்கை இழந்த மக்கள் இருளிலிருந்து மீள ஒளியை நாடுவது இயல்பல்லவா? எனவே எங்கும் எதிர்ப்பு. குருக்களின் பொருளற்ற போலித் தன்மையை ஆங்காங்கே அறிஞர்கள் அம்பலப் படுத்தி வந்தனர்.

மக்கள் எழுச்சியில் சீற்றங் கொண்ட மதத் தலைவர்கள் கொடுங் கோன்மையை மேற்கொண்டனர். மக்களின் ஐயங்களை நேரிய முறையிலும் உரிய முறையிலும் களைய முற்படாது, பயங்கர முறைகளைக் கையாண்டு அவர்களை அடக்கியாள முற்பட்டனர். அவர்கள் இழைத்த கொடுமைகள் வரலாற்றில் பரந்து கிடக்கின்றன. ஒன்றிரண்டு இங்கே காணலாம்.

கி. பி. 1155-ல் ஆர்னால்டு என்ற பிரபல இத்தாலியர் ஒருவர்—மக்களிடையே அன்பு பூண்டவர்—மதத் தலைவர்களின் அட்டூழியங்களையும், ஆடம்பரங்களையும் எடுத்தோதி மக்களை விழித்தெழச் செய்து வந்தார். அவர்பால் சீற்றமுற்ற சமயத் தலைவர்கள், அவரைப் பிடித்துத் தூக்கிலிட்டு, பின் அவர் பிணத்தை எரித்து அச் சாம்பலைத் "தைபர்" ஆற்றில் எறிந்து, துன்பம் நிறைந்த இந்த உலகவாழ்விலிருந்து அவரை மீட்டு 'வீட்டு' வாழ்க்கையை அவர்கள் 'அருளால்' நல்கினர்.

மக்களின் எதிர்ப்பு, பன்மடங்கு பெருகியது. பன்னாட்டு மக்களும் எதிர்த்தனர். அவற்றை நசுக்க ஒரு புதிய வழி மேற் கொள்ளப்பட்டது. கி. பி. 1233-ல் 'பரிசீலனை' (**Inquisition**) என்ற பெயரால் அதிகார பூர்வமான ஒரு கொடுங் கோன்மையை மதத் தலைவர்கள் மேற் கொண்டனர். இது ஒரு தன்மையான நீதி மன்றம். இங்கு, மக்களின் கொள்கைகளின் சீலங்கள் சீர் தூக்கிப் பார்க்கப்பட்டன. எங்கு அவைகள் குறித்த தகுதிக்கு ஒப்புமைப் படவில்லையோ அங்கெல்லாம் மக்கள் ஒதுக்கப்பட்டனர். வழக்கமான தண்டனை உயிருடன் எரித்தலேயாகும். இம் முறையால் மக்கள் கூட்டங் கூட்டமாக எரிக்கப்பட்டனர். தங்கள் சீற்றத்துக்குத் தப்பிய பகைவர்கள், அவர்கள் இறந்த பின்னும் சவக்குழியினின்றும் தோண்டி எடுக்கப்பட்டு எரிக்கப்பட்டனர்.

அக்காலத்தில் ஐரோப்பிய நாட்டின் சமயம் இங்ஙனம் 'தொண்டாற்றி' வந்தது. ஐரோப்பிய வரலாற்றில் இச் சமயப் பூசல்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. ஏனெனில் தற்போதைய ஐரோப்பா எப்படி உருவான தென்பதை இவைகள் நன்கு விளக்கும்.

இங்ஙனம் நடை முறையில் கையாளப்பட்ட சமய 'ஒழுக்கங்களையும்' சமயாசிரியர்களின் 'தொண்டுகளையும்' வெறுத்தும், அன்னாரால் திணிக்கப்பெற்ற பொருளற்ற, ஆயினும் அவற்றில் சிறிதும் ஐயங் கொள்ளாது மேற்கொள்ள ஆணை கொண்ட, பழக்க வழக்கங்களையும் எதிர்த்தும் எழுந்த அறிஞர்களின் கூற்றுகளே, திரு. வேதநாயகம் பிள்ளையவர்களால் குறிப்பிடப் பட்ட மேற் சொன்ன 'நாத்திக' நூல்கள்.

குருகுலக் கைத்தறிகளில்
நெய்த
**மேல் துண்டுகள்**
**(டவல்கள்)**
**முறுக்கு நூலால் ஆனவை!**
**தூய்மையான சலவை!**
**கெட்டியான சாயம்!**
**அழகிய கரைகள்!**
மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.
அளவுகள்: 24"X48"
26"X52"
28"X54"
30"X60"
**வணிகர்க்கு,**
**தக்க கழிவுகள் உண்டு!**
**குருகுலம், மாம்பாக்கம்;**
**மதுராந்தகம் P. O.**

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

அங்கு இருக்கும் ஆசிரியை ஒரு மாதத்திற்கு ஒரு முறையாவது அங்குச் சுற்றியுள்ள சேரிகளுக்குச் சென்று அங்குள்ளவர்களை நாகரிகமடைந்து முன்னேறச் செய்யவேண்டும். அவர்கள், பிள்ளைகளை உல்லாசப் பிரயாணம் அழைத்துச் செல்வதும் உண்டு.

தினந்தோறும் காலை கொடி வணக்கம் செய்வது வழக்கம். வெள்ளி தோறும் காந்திஜி படத்தை அலங்கரித்து விசேடப் பிரார்த்தனை செய்வார்கள். இங்குப் பல பெரிய பெரிய அதிகாரிகளெல்லோரும் வந்து பார்வை இட்டுச் செல்வர்.

அந்தப் பள்ளிப் பிள்ளைகள் நடந்துகொள்ளும் விதமும் அதன் வேலைகளும்:—அங்குள்ள பிள்ளைகள் காலை ஐந்து மணிக்கு எழுந்து உடனே உதயராகம் 'பாரதமாதா பள்ளியெழுச்சிப் பாடலைப் பாடுவார்கள். பிறகு பல் துலக்குதல், குளித்தல் போன்ற பல வேலைகள் நடைபெறும். ஆறுமணிக்கு இறை வணக்கம் செய்த பிறகு தேகப் பயிற்சி செய்வார்கள். அங்குள்ள பிள்ளைகள் பல தொகுதிகளாகப் பிரிந்திருப்பர்; ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு தலைவி உண்டு. அந்தந்தத் தொகுதிக்குக் குறிக்கப்பட்டிருக்கும் வேலைகளை அவரவர் செய்வர்.

வேலை முடிந்தவுடன் எட்டு மணி சுமாருக்குக் கொடிவணக்கம் செய்வர்.

பிறகு உணவு விடுதியில் உண்டுவிட்டுப் பின் பள்ளிக்குச் செல்வர். கொடி வணக்கத்திற்கு வேண்டிய பாட்டுக்களும் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன.

பலவித விளையாட்டுகள் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. பின், பள்ளியிலிருந்து வந்தபிறகு கொடியை இறக்க வேண்டும்.

மாலையில் செய்யவேண்டிய வேலைகளைச் செய்யவேண்டும்; மாலை ஆறுமணிக்குள்ளாகச் சாப்பிட்டு விட்டு மாலைப் பிரார்த்தனை செய்ய வேண்டும்; பிறகு சிறிது நேரம் படிப்பார்கள்.

இங்குக் கூடச் சிற்சில சமயங்களில் பயிற்சிமுகாம் நடப்பதுண்டு. அதில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து வேலை செய்வார்கள். அப் பயிற்சி சுமார் ஒரு வாரம் வரையில் இருக்கும். பிள்ளைகள் எவ்வாறு வேலை செய்வார்களோ அதன்படி மற்றவர்களும் செய்யவேண்டும்.

ஆண்டு விழாவுக்காகவேண்டிப் பல நாடகங்களும் நடிப்பது உண்டு. அங்குச் செய்யப்பட்ட பொருள்களைக் கொண்டு பொருட்காட்சிச் சாலை வைப்பதும் உண்டு.


## குருகுல் - - - வெளியீடுகள்

1. ஒளி வழிபாடு
விலை அணா 6.

2. திருமூலர் அருள்மொழிகள்
விலை அணா 4.

3. தனிகைமலை அல்லது அமைதி
விலை அணா 6.

4. நல் வாழ்க்கை
விலை அணா 1.

5. திருக்கழுக்குன்றப் பதிக விளக்கம்
விலை அணா 1.

6. கருக் கலை
விலை அணா 4.

7. மூன்று உண்மைகள்
விலை அணா 3.

8. இராமலிங்க அடிகள் வரலாறும் திருவருட்பா ஆராய்ச்சியும்
விலை அணா 9.

9. முல்லைப்பாட்டு அகராதி
விலை அணா 8.

10. திருமுருகாற்றுப்படை அகராதி
விலை அணா 8.

11. தொல்காப்பியம் அகத்திணையியல் விளக்கம்
விலை ரூ. 1.

12. ஆத்திசூடி . கருத்துரை
விலை 0-0-3.

ஷை நூறு அமைந்த கட்டு 1-2-0.

கிடைக்கும் இடம்:

குருகுலம், மாம்பாக்கம்,

மதுராந்தகம், P.O., (S. I. R.)


பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்; தி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம், (அஞ்).